REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 23உ வெள்ளி (9—12—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 24உ சனி (10—12—55) [இதழ் 152

நேருவிற்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம்

'தெலிங்கானா மாகாணம் தேவை' என முழக்கம்

ஐதராபாத், டிச. 8—

'எங்களுக்குத் தெலிங்கானா மாகாணம் தேவை' என்ற வாசகங்கள் பொறித்த அட்டைகளைத் தாங்கிய மாணவர்கள், பண்டித நேருவிற்கு எதிராக முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பீகம்பேட்டை விமான நிலையத்திலிருந்து ஐதராபாத் நகரத்திற்குச் செல்லும் பாதை நெடுக, மேற்குறிப்பிட்ட வாசகங்கள் முழக்கப் பொறித்தத் தட்டிகள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன.

'நீதிபதியாக வேறு மாநிலத்தவரை நியமிக்க முடியாது'

'சீரமைப்புக் குழுவின் சிபாரிசுக்கு இணங்க மாட்டோம்'

டில்லி ஆதிபத்தியத்திற்கு சென்னையின் பதில்

சென்னை, டிச. 9—

"பிரதேச மொழிகளுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டுமென்ற சூழ்நிலை மிகமிக வேகமாக வளர்ந்து வருகின்ற இந்த நேரத்திலும், மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகளில் மூன்றில் ஒரு பகுதியினரை வெளி மாநிலத்தவராக நியமிப்பது என்றால், அது, மிகப் பெரும் தொல்லைகளையும், கஷ்டங்களையும்தான் விளைவிக்கும். 'மூன்றிலொரு பகுதி நீதிபதிகளை வெளி மாநிலத்தவராக நியமிக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்திருக்குமுன், மேற்கூறப்பட்ட உண்மையினை, மாநிலக் குழுவினர் நன்றாகச் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும் என்று சர்க்கார் கருதுகிறது,"

என்று, சென்னை சர்க்கார், மாநில நீதிபதிகளில் மூன்றிலொரு பகுதியினரை வெளி மாநிலத்தவராக நியமிப்பது குறித்த மாநிலக் குழுவினரின் அறிக்கைக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து ஆட்சேபணைக் குறிப்பொன்று விடுத்திருக்கின்றனர்.

இந்த ஆட்சேபக் குறிப்பினை சென்னை சர்க்கார், மத்திய சர்க்காருக்கும் தெரிவித்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது

அச்சுறுத்தலுக்கும்— ஆர்ப்பாட்டங்களுக்கும் அடிபணிய மாட்டாராம்!

பொட்டி சீராமுலுவின் உயிர்த் தியாகத்தால் ஆந்திரம் பிரிக்கப்படவில்லையாம்!

ஐதராபாத்தில் பிரதமர் நேருவின் வீரப்பிரதாபம்!

செகந்திராபாத்—

"மாநிலங்களைச் சீர்திருத்தி அமைக்கும் பிரச்சினைக்காக நடைபெறும் எவ்விதப் பயமுறுத்தல்களுக்கும், உண்ணாவிரதங்களுக்கும் சர்க்காரோ அல்லது காங்கிரஸ் தலைமைப்பீடமோ பயந்துவிடப்போவதுமில்லை—பணியப் போவதுமில்லை."

"பொது மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குப் பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கின்றனர். சமாதானமற்ற முறையில் நடைபெறுகின்றன; இத்தகுப் போராட்டங்கள் குறித்து நான் பொருட்படுத்தப்போவதில்லை! இவ்வளவு ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் நடைபெறுகிறதென்றாலும், 'வாழ்க', 'சிந்தாபாத்' முழக்கங்கள் ஏன் எழுப்பப்படுகின்றன என்பதே எனக்குப் புரியவில்லை; இந்தப் பிரச்சினை ஒரு குறிப்பிட்ட மாநிலத்தையும் அதன் மக்களையும் பொறுத்திராமல் நாட்டின் முழு நலனையும் பொறுத்திருக்கிறது."

—இவ்வாறெல்லாம், இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், இங்கு நடைபெற்றக் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறினர்:—

"பம்பாயில் அண்மையில் பயங்கர விளைவுகளைத் தந்த ஆர்ப்பாட்டங்களைத் தூண்டியவர்கள் உண்மையிலேயே தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டவர்களாவர். பம்பாய் நகரைப் பொறுத்த வரையில், அது ஒரு பல மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒன்றாக இருப்பதால், அதனை யாரும் தங்களுக்குரியது எனச் சொந்தம் கொண்டாட முடியாது; இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின்போது பம்பாய் நகரம் முக்கிய பங்கேற்றிருக்கிறது; அதன் மூலம் பம்பாய் நகரம், நாட்டு மக்களின் இதயத்திலெல்லாம் இடம் பெற்றுவிட்டதையும் நாம் நினைவு படுத்திக்கொண்டு, அது, 'நாட்டிற்குச் சொந்தமானது' என்று மட்டும்தான் கூற முடியும்."

விசால ஆந்திரம் அமைப்பது குறித்துத் தமது கருத்தைத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

'ஐதராபாத் மாநிலம் பிரிக்கப்படவேண்டுமென்று தனிப்பட்ட முறையில் நான் விரும்பினது கிடையாது. ஆனால் பொது மக்கள் விருப்பம், ஐதராபாத் மாநிலம் துண்டாடப்படவேண்டும் என்றிருந்ததைப் போலவே மாநில புனரமைப்புக் குழுவினரும் ஐதராபாத் துண்டாடப்படச் செய்துவிட்டனர்

"தெலிங்கானா மாநிலம் ஐந்து ஆண்டுகளுக்குத் தனித்திருந்து அதன் பின்னர் ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று குழு சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால், இதனை நடைமுறையில் கையாண்டால் ஒருவருக்கொருவர் அதிருப்தி கொள்ள நேரிடுவதுடன், அடிதடிகளும் ஏற்பட்டு, அதனால் மக்களுக்குத் தீங்கு விளையும் என்று காங்கிரஸ் செயற்குழு கருதிற்று. எனவேதான் மக்களுக்கு விருப்பம் உண்டானால், உடனடியாக விசால ஆந்திரம் அமைக்கப்பட வேண்டும் என்று செயற்குழு முடிவு செய்திருக்கிறது

"ஒரு சமயத்தில், ஐதராபாத் பிரிக்கப்படக் கூடாது என்று நானும்தான் கருதினேன். ஆனால், இப்போது அங்குள்ள மக்களே இதனை வலியுறுத்தினர்; மாநில புனரமைப்புக் குழுவும் அதற்கு ஆதரவாகச் சிபாரிசு செய்துவிட்டனர். ஐதராபாத்திலுள்ள தெலுங்கு பேசப்படும் பகுதிகளின் எதிர்காலம் பற்றி ஆலோசிக்கும்போது விசால ஆந்திரக் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது. ஐதராபாத் ஆந்திரப் பகுதிகள் பற்றி இருந்துவரும் இந்த நிச்சயமற்றத் தன்மையை மேலும் நீடிக்கவிடாமல் ஏதாவது ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துதான் ஆக வேண்டும்.

"மாநிலங்களைத் திருத்தியமைப்பதின் நோக்கமே, நிர்வாக வசதியை அடிப்படையாகக் கொண்டதுதானே தவிர வேறெதற்காகவும் அல்ல.

"'பொட்டி சீராமுலுவின் தியாகத்தால்தான் ஆந்திர மாநிலம் உருவாயிற்று'—என்று பொதுவாக இருக்கிற ஒரு கருத்தை காங்கிரஸ்காரர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். பொட்டி சீராமுலுவின் தியாகத்தாலேயே ஆந்திர மாநிலம் கிடைத்துவிடவில்லை என்பதையும், சென்னை நகரையும் ஆந்திரர் தங்களுடையதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையைக் கைவிட்ட பின்னர்தான் ஆந்திர மாநிலம் உருவாயிற்று என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்."

டில்லி திணிக்காது?

"நாட்டின் பல்கலைக் கழகப் படிப்பில், எந்த மொழியையும் போதனா மொழியாகத் திணிக்கும் உத்தேசம் இந்திய சர்க்காருக்குக் கிடையாது" என்று, ராஜ்யங்கள் சபையில், துணை கல்வி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

நகரசபை அதிகாரியை நகரசபை உறுப்பினர் தாக்கினராம்!

தாக்கியவர் அண்ணாமலை (பிள்ளை)யின் திருக்குமாரராம்!

திருவண்ணாமலை, டிச 9—

திருவண்ணாமலை நகர சபை உறுப்பினரும், சென்னை மேல் (சட்ட) சபையில் காங்கிரஸ் உறுப்பினராயுள்ள திரு. அண்ணாமலை பிள்ளை அவர்களின் குமாரருமான திரு. காசிலிங்கம் அவர்கள், நகர அமைப்புத் திட்ட, கட்டிட நிர்மாண இன்ஸ்பெக்டர் திரு வெங்கு என்பவரைத் தாக்கியதாகவும், அவரிடமிருந்த காரியாலய 'பைல்'களை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் போலீசாரிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறதாம்.

கொசயடம் வீதியில், வேலாயுதம் என்பவர், முனிசிபல் கமிஷனரிடமிருந்து அனுமதி பெறாமல் ஒரு கட்டிடம் கட்டியதாகவும் அனுமதியின்றிக் கட்டப்பட்ட அக்கட்டிடத்தை இடித்துவிடுமாறு, அல்லது அனுமதி கோரி மனுச் செய்யுமாறு 'நோட்டீஸ்' அளிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

நோட்டீசில் தெரிவித்தபடி வேலாயுதம் என்பவர் செய்யவில்லையாம்; எனவே, அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம், டிச. 5-ந் தேதியன்று நகரசபை பிரதிநிதி மூலம் இடிக்கப்படும் என்றும் வேலாயுதத்திற்கு அறிவிக்கப்பட்டதாம்; கட்டிடத்தை இடிப்பதற்கு திரு வெங்கு அனுப்பப்பட்டாராம்

வேலை முடியும் தருவாயில் இருக்கும்போது, திரு காசிலிங்கம் அங்கு வந்து வெங்குவைத் திட்டி, பின்னர் தாக்கியதாகவும், அவரிடமிருந்த 'பைல்'களை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

புயலுக்குப் பலியானோர் தொகை உயருகிறது!

நிவாரண வேலை மும்முரமாகிறது

சென்னை. டிச. 8—

புயல், வெள்ளச் சேதங்களையொட்டி, தஞ்சை மாவட்டம் புதுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி தாலுகாக்களில் மரணமடைந்தவர்களின் தொகை வளர்ந்துகொண்டே வருகிறது.

நேற்று வரை கிடைத்துள்ள தகவல்களின்படி, இந்த மூன்று வட்டாரங்களிலுமாக மொத்தம் 317 பேர் மாண்டனர் என்று தெரிகிறது.

வேதாரண்யம் உட்பட திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 259 பேர்களும், பட்டுக்கோட்டையில் 48 பேர்களும், அறந்தாங்கியில் 10 பேர்களும் இறந்துபட்டிருக்கின்றனர்.

இவைகளைத் தவிர, முழு விவரங்களையும் சேகரிக்க இயலாத அளவிற்குச் சில கடற்கரையை ஒட்டிய பகுதிகளும் அதற்கு அருகாமையிலுள்ள சில கிராமங்களும் சேதமுற்றுள்ளனவாம்.

மாயவரம்—திருத்துறைப்பூண்டி. பட்டுக்கோட்டை, அறந்தாங்கி இரயில் போக்குவரத்துக்கள் இன்னும் துண்டிக்கப்பட்டேதான் இருக்கின்றன.

அறந்தாங்கி ரோடுகளில் இன்னும் தண்ணீர் தேங்கி நிற்கின்றனவாம்; என்றாலும் சிறிதளவுக்கு போக்குவரத்துக்கள் மீண்டும் நடைபெறுகின்றன என்று கூறப்படுகிறது.

அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்களெல்லாம் அப்படியே அழுகி வீணாகிப் போய்விட்டன என்றும் கூறப்பட்டிருக்கிறது அத்துடன், எண்ணற்றக் கால் நடைகளும் உயிரிழந்திருக்கலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகாவில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் சேதமடைந்தனவாம்; ஆயிரக்கணக்கான புளிய மரங்களும், மா, பலா மரங்களும் வேருடன் சாய்ந்துவிட்டனவாம்.

கோத்தமங்கலத்தில்...

பட்டுக்கோட்டை தாலுகா கொத்தமங்கலத்தில் ஏராளமான வீடுகளும், மரங்களும் சேதமுற்றனவென்றும், தாழ்ந்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகள் பெருஞ் சேதத்திற்கு உள்ளாகியுள்ளதென்றும், ஏராளமான தானியவகைகள் பல தண்ணீரால் பாழாகிவிட்டதென்றும், மக்கள் பலர் தங்குவதற்கு வீடின்றித் தவிப்பதாயும், செய்தி கிடைத்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மாவட்டப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றியும், பலியான மக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 9-12-'55 வெள்ளி

ஆசிரியர்களும், பதிப்பகங்களும்

ஆசிரியர்கள் — பொருள் நிரம்பிய சொல்தான்! இருந்தால் என்ன?

ஆசிரியர் என்ற சொல், மிகமிக மதிப்புடைய ஒரு சொல்லாகக் கருதப்படுவது போன்றே, அச்சொல்லைச் சுமந்திருப்பவர்களை அரசாங்கமும் சரி, சமுதாயமும் சரி, பாராட்டி ஆதரிப்பது கிடையாது. துவக்கப்பள்ளி ஆசிரியர் முதல் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் வரை இருந்து

பதிப்பகம் வைத்து நடத்தும் ஒவ்வொருவருமே, பண்டிதர் கூறியுள்ளதுபோல், ஆசிரியர்களை வறுமையில் தள்ளிவிட்டு, அவர்கள் உழைப்பால் தம் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்வதிலேயே நாட்டமாக இருக்கிறார்கள் எனக் கூறிவிடுவதற்குமில்லை. மற்றத் தொழில் துறைகளில் சான்றோர்களும், கயவர்களும் ஊடுருவிக்கொண்டு இருப்பது போன்றே, நூல்களை வெளி

புதிய சமுதாயத்தை உருவாக்குகிறவர்களும் சிறந்த அரசியல் அறிஞர்களை ஆக்கித் தருகிறவர்களும், தேர்ந்த நிர்வாகிகளைப் படைத்தளிக்கிறவர்களும் அவ்வாசிரியர்களே யாவர். இருந்தாலும், ஆசிரியர்களின் நிலைதான், மற்றத் துறைகள் அனைத்திலும் ஈடுபடுகிறவர்களைக் காட்டிலும் மிக மிக மட்டமாக இருந்து வருகிறது.

ஆசிரியர் என்ற சொல்லுக்குரியவர்களின் பொறுப்பும் அதிகம்—மதிப்பும் கூடுதல்—பணியும் மிகுதி. இவைகளை நினைவுபடுத்தி, அவர்களை வாழ்க்கையின் அடித்தளத்திலேயே வைத்திருக்கும் அரிய முயற்சியைத்தான் அரசாங்கம் தீவிரமாகச் செய்து வருகிறது. வேதனை தரும் விவகாரம்.

பள்ளி ஆசிரியர்களின் நிலை மட்டுமே இத்தகைய கீழ் நிலையில் தள்ளப்பட்டுக் கிடக்கிறது; அரிய நூல்கள் ஆக்கித்தரும் ஆசிரியர்களின் நிலை, அவர்களுக்குரிய உயர் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது என எவரும் கருதிவிடக் கூடாது. அவர்கள் நிலையோ பள்ளி ஆசிரியர்களின் நிலையினும் பல மடங்குத் தாழ்வான நிலையிலேயே இருந்து வருகிறது.

சமூக மக்களின் உயர்நலனுக்காக இன்றியமையாது வேண்டப்படும் பொருநூல்கள் பலவற்றை இயற்றித்தரும் நல்லாசிரியர்கள் குறித்து, நெஞ்சம் நடுக்குறும் சிறந்த விளக்கமொன்றை இந்தியப் பிரதமர் நேரு, அகில இந்திய பதிப்பகத்தார், விற்பனையாளர் ஆண்டுக் கூட்டத்தில் அளித்துள்ளார். அதைப் படிக்கும் பொழுது, நூல் பல இயற்றும் நொந்த வாழ்வு வாழும் நல்லறிவாளர்களைக் காட்டிலும், பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை மேல் என்றுதான் எவருக்கும் எண்ணத் தோன்றும்.

நூல் இயற்றும் நல்லாசிரியர்களைப் பதிப்பகத்தார் படுத்தும் பாட்டினை பண்டிதர் கல்நெஞ்சையும் கரைக்கும் வகையில் எடுத்துக்காட்டியுள்ளார். ஆசிரியர்களை வஞ்சித்துச் சுரண்டித் தம் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளும் இத்தகைய பதிப்பகத்தார்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமன்றி, உலக நாடுகள் அனைத்திலும் இருந்தனர் — இருந்து வருகின்றனர் என்றும் பண்டிதர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லவர்களும் தீயவர்களும் கலந்திருக்கிறார்கள் எனக் கொள்வதே பொருத்தமுடையதாகும். இந்த உண்மையையும் பண்டிதர் ஆணித்தரமாக எடுத்தியம்பியும் உள்ளார்.

தமிழ் நூல்களைப் பொறுத்த வரையில், தமிழ் நூல் ஆசிரியர்கள் தரமட்டமாக ஆக ஆக, அந்த அளவு தங்களை உயர்த்திக் கொண்டும், பதிப்பகத் தொழிலில் தங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என ஆணவத்துடன் கொக்கரித்துக் கொண்டிருக்கும் நல்லியல்பினரும் இல்லாமல் இல்லை. அப்பெருங் குணவான்களில் ஒருவர் இருவர் அடிசாய்ந்தும் விட்டனர்; எஞ்சி நிற்கின்றனர் இரண்டொருவர்.

'தென்னாடுடைய சிவனே போற்றி! என்னாட்டுக்கும் இறைவா போற்றி!' எனக் கண்மூடித் திறக்கும்பொழுதெல்லாம், அருகில் இருப்பவர் செவிகள் செவிடுபடும்படிக் கத்தாமல் இருப்பதும் கிடையாது. பூசையையும் புனஸ்காரத்தையும் அப்பெருங்குணத்தவர்கள் கைவிடுவதுகிடையாது. ஆனால் அவர்களிடம் சிக்கிக் கொள்ளும் நூலாசிரியர்களோ, வறுமைப் பிணியிலிருந்து என்றென்றும் மீளுவதே கிடையாது.

மேற்குறிப்பிட்ட நடைமுறை உண்மை போன்றே, பொருளீட்டுதல் ஒன்றை மட்டுமே தொழில் இலட்சியமாகக் கொண்டுவிடாமல், புதுப் புது நூலாசிரியர்களை உருவாக்கி, அவர்கள் செம்மையாக வாழக் கூடுமான வரை உதவும் பண்பு கொண்ட பதிப்பகத்தார்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். அதுவுமன்றி, மக்கள் அறிவு விளக்கம் பெறுவதற்கான, அறிவுக் களஞ்சியங்கள் எனப் போற்றத்தக்க சிறந்த நூல்களை வெளியிட்டு, அறிவு உலகுக்குச் சேவை செய்வதையும், பிறவிப் பணியாகக்கொண்டு பதிப்பகம் நடத்திவரும் அறிவின் நாதவர்களாகவும் அவர்களில் சிலர் இருந்துவருகிறார்கள்.

பதிப்பகத்தார்களில் மற்றொரு சாராரும் உண்டு. அவர்களோ, ஏற்கனவே வெளியாகி உள்ள குறிப்பிட்ட ஒரு நூலின் முன்னுரையையும் பதிப்புரையையும் புறம்பிச்சுவிட்டு, நூற்பொருளின் முதல் இரு பக்கங்களை வேறாகப் புகுத்தியும், உள் பக்கங்களில் இரண்டொரு இடங்களில் பொருளைச் சிதைக்காது—அப்பணிபுரியும் அறிவு

கடினமாக உழைப்பது ... யானதுதான்; ஆனால் ... யெல்லாம் விலக்கிவி... நாட்டில் வாழ்ந்த ரிஷி... நூல்களை வாசிப்பதும், ... கூறியுள்ளவற்றை ...

இல்லாததால்—சொ... டும் முன்னுக்குப் ... புரட்டிப்போட்டுவிட்... திப் பக்கத்தில் 'மு... என்று இருந்தால் '... என்ற சொல்லை அ... செய்து, 'புதிய புத்தக... யிடும் பித்தலாட்... களும் இருக்கிறார்கள்... களும் பதிப்பகத்தார்... இவர்களின் புத்தக... முறையோ, காண்ட... மிக்கும்படியாக இ... பணம் பத்துவகையு... மல்லவா?

இக்கடைகெட்ட ... தார்களுக்கு, ஆ... கிடைப்பதும் அ... இருக்கவில்லை. '... ஏற்றத் தொந்தல்' போல, இதுகளுக்... அதுகளும் எண்ணில... கிடைத்துவிடுகின்றன...

அந்த ஆசிரி... 'இடிந்த கோயில்' ... பெயரில் ஒரு நூல் ... இருந்தால், 'இ'க்கு... 'உ' எனக் கூட்டி '... கோயில்' என எழு... கள் ஒரு நொடிப் ... இருநூல்களின் ... ஒன்றாகவே இருக்கும்... கருத்து எதிலும் ... இருக்காது. ஆனா... நூலில், செயப்படு... முன்னே தொடங்... எழுவாய் இறுதியில்... பட்டு இருக்குமா... விரண்டையும் முன்... மாக மாற்றி அமை... புதிய 'ஊடுருவி பே... இயற்றிய 'பதில் ... நூல்களில்! தமிழ்... உலகை ஒட்டிக்கெ... இச்சூசகள் என்று... யுமோ!

ஆசிரியர் நிலை ப... வந்த பண்டிதர், ... இல்லையேல் பதிப்... இல்லை; விற்... இல்லை' என நன்... காட்டியுள்ளா... போன்றே ஆசி... பதிப்பகத்தார் — ... ளர் ஆகிய மூவ... முறையில்ஒத்துழைத்... உயர்ந்த நூல்கள் ப... விலையில் சமூகத்திற்... பது எளிதாகும் என... தர் எடுத்துக்காட்...

வாழ்வின் அந்திப் பொழுதில் அவர் தேடிக்கொண்ட நிதி!

இதிகாசத்தில் அவர் அடையும் பேரானந்தம்!

சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும்!' எனப் பதவி பறிக்கப்பட்ட பின்னர் ஆச்சாரியார் அலறுகிறார்!

பம்பாய், டிச. 8—

"இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் மீண்டும் எடுத்துச் சொன்னதுதான், நாட்டு மக்களுக்கு நான் செய்துள்ள சிறந்த சேவையாகும்,"

என்று, ஆச்சாரியார் அவர்கள், அவரால் எழுதப்பட்டு இங்கு மறுபதிப்பாக வெளிவந்துள்ள 'மகாபாரத'த்திற்கு எழுதியுள்ள முன்னுரையில் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறுகிறார்:

"அரசியல், நாட்டுச்சேவை, பதவி ...

... பெறுவதற்கு இந்தப் புத்தகங்கள் உதவி செய்திருக்கின்றன. என்னுடைய வாழ்வின் அந்திப் பொழுதில், இது எனக்கு பெரும் மகிழ்வை அளித்திருக்கிறது."

எடுத்துச் சொல்லுவதும் அதைவிட நன்மையானது என்பதே என்னுடைய அனுபவமாகும்.

"வாழ்க்கையின் பல துறைகளில் நான் பங்கு கொண்டிருந்திருக்கிறேன்; ஆனால், நான் செய்த இந்த இரண்டும்தான், நாட்டு மக்களுக்கு என்னுடைய சிறந்த சேவையாகும் என்று நினைக்கிறேன்.

"என்னுடைய இந்த இரண்டு புத்தகங்களையும் பலர் படித்து மகிழ்ச்சியுற்றுள்ளனர். தமிழ் நாட்டிலுள்ள எளிய (சூது ...

தொழிலாளர் வாழ்வில் 'மறுமலர்ச்சி'யா?

தொழில்துறைத் தகராறுகள் காண்பிக்கும் புள்ளிவிபரம்

புதுடில்லி, டிச. 7—

தொழில் துறைத் தகராறுகள் பற்றிக் கிடைத்துள்ள தற்காலிகப் புள்ளி விவரங்களின்படி 1955 செப்டம்பரில் மொத்தம் 61 தகராறுகள் ஏற்பட்டன. இவைகளில் 50 தகராறுகளில் 16,465 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். முந்திய மாதத்துடன் ஒப்பிடும்பொழுது பரிசீலனை மாதத்தில் புதிய தகராறுகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்திருக்கிறது. முந்திய மாதத்தில் புதிதாக ஏற்பட்ட 200 தகராறுகளில் 82,411 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

பரிசீலனை மாதத்தில் நிலவிய தகராறுகளின் மொத்த எண்ணிக்கை 220; இதில், 149 தகராறுகளில் 84,377 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். ...

...களின் மொத்த எண்ணிக்கை 232; அவற்றில் சம்பந்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 90 324

மொத்தம் 16 920 தொழிலாளர் சம்பந்தப்பட்டிருந்த ஒன்பது தகராறுகள் கதவடைப்புகளால் ஏற்பட்டவையாகும். அவை காரணமாக மொத்தம் 1,64 916 நபர்—நாட்கள் நஷ்டமாயின.

பைசலான தகராறுகள்

பரிசீலனை மாதத்தில் 189 தகராறுகள் முடிவடைந்துவிட்டன. இதில் 50 தகராறுகள் ஒவ்வொன்றும் ஐந்து நாட்களுக்குமேல் போகாமலும், 15 தகராறுகள் ஒவ்வொன்றும் 30 நாட்களுக்கு மேலும் நீடித்திருந்தன. 17 தகராறுகளில் தொழிலாளர்களுக்குப் பூரண வெற்றியோ, ஓரளவு வெற்றியோ கிடைத்தது; 23 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. 11 தகராறுகளின் முடிவு நிச்சயமாகத் தெரியவில்லை; 138 தகராறுகளில் முடிவே தெரியவில்லை. இவைகளில் 20 தகராறுகள் 'கூலிகள்—படிகள்' சம்பந்தப்பட்டவையாகும்; 13 தகராறுகள் சிப்பந்திகள் சம்பந்தப்பட்டவையாகும்; பாக்கி 11 தகராறுகள் இதர காரணங்கள் பற்றியவையாகும்.

பரிசீலனை மாதத்தில் நேரநஷ்டம் மேற்கு வங்காளத்தில்தான் மிக அதிகமாக ஏற்பட்டது; அதற்கடுத்தபடியாக முறையே சென்னை, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகியவைகளைச் சொல்லலாம். இதர மாநிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பரிசீலனை மாதத்தில் நேரநஷ்டம் கணிசமாகக் குறைந்திருந்தது.

மாண்டவரும் மீளுவராம்!

சோவியத் விஞ்ஞானிகளின் புது ஆராய்ச்சி!

மாஸ்கோ, டிச. 4—

ஒரு மனிதன் இறந்து ஆயிரம் ஆண்டுகள் கழித்த பின்னரும் கூட, அவனை மீண்டும் உயிர் பெற்றெழச் செய்ய முடியும் என்று சோவியத் விஞ்ஞான நிபுணர்கள் நம்புகின்றனராம்!

ஆயிரம் ஆண்டுகள் கழித்த பின்னர் மனிதனை உயிருடன் உலவச் செய்யலாம் என்றாலும், அந்த இடைக்காலத்தில், இறந்துபட்டவருடைய உடலை பனிக்கட்டிக்குள் வைத்து அழுகிவிடாமல் பாதுகாத்துவர வேண்டுவதுதான் மிக முக்கியம என்றும் அவர்கள் சொல்கிறார்களாம்.

பிரபல சோவியத் விஞ்ஞானியான ...புரேவ் என்பார், பல ஆண்டுக்காலமாகப் பனிக்கட்டிக்குள் புதைந்து கிடந்த 'எரா' எனப்படும் ஒருவகை மீனின் முட்டைகளை உயிர்ப்பிப்பதில் வெற்றி கண்டுள்ளாராம். ஆண்டாண்டுக் காலமாகப் பனிக்கட்டிக்குள் புதைந்துகிடந்த இந்தமுட்டைகளிலிருந்து வெளிப்பட்ட 'எராக்'கள் மீண்டும் புது முட்டைகளிட்டு குஞ்சு பொரித்து இனத்தை விருத்தி செய்துகொண்டன என்றும் கூறப்பட்டிருக்கிறது!

இந்த முறைகளைக் கவனித்தால் மாண்டுபோன மனிதனையும் உயிர் பெற்றெழச் செய்ய முடியும் என்று அவர்கள் நம்புகின்றனராம்

பல சோதனை ஆராய்ச்சி நிலையங்கள் தற்போது சுற்றுப்புறப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றனவாம்.

6,95,239 பேர் வேலை தேடுகின்றனர்!

புதுடில்லி, டிச. 7—

வேலை தேடித்தரும் நிலையங்களில் வேலை கோரிப் புதிதாகப் பதிவு செய்துகொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1955 செப்டம்பர் மாதத்தில் 1,44,888 ஆக இருந்தது; அக்டோபர் மாதத்தில் அது, 1,21,978 ஆகக் குறைந்துவிட்டதாம்!

பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை குறைந்தபோதிலும், வேலை தேடிப் பதிவு செய்துகொண்டிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை மட்டும் குறையவில்லையாம்! இந்த எண்ணிக்கை முந்திய மாதத்தில் 6 93,775 ஆக இருந்தது—பரிசீலனை மாதத்தில் 6,95,239 ஆக அதிகரித்திருந்தது.

அக்டோபர் மாதத்தில் மொத்தம் 13,461 பேருக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டதாம்!

1955 மார்ச்-ஜனவரி வரையில் மொத்தம் 8 73 984 கைத்தறிகள் கூட்டுறவு ஏற்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பாண்டுங் நாடுகள் போக்கு பற்றி நேரு!

'இலட்சியத்திற்கு முரணாக நடக்கின்றன'

புதுடில்லி, டிச. 7—

"பாண்டுங் மாநாட்டில் கலந்து கொண்ட சில நாடுகள், அம்மாநாட்டின் கொள்கைக்கும், இலட்சியத்திற்கும் முரணான நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது உண்மையா?"

என்று, மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பிரதமர் நேரு, 'இதுவே எங்களுடைய கருத்தாகும்; இம்மாதிரியே நாங்களும் நம்புகிறோம்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

கோவா பற்றி அமெரிக்கக் கருத்து

வெளிச்சம் தருகிருர் டல்லஸ்: விளைவுகள் விபரீதமாகிறது

வாஷிங்டன், டிச. 6—

கோவா போர்ச்சுகலின் ஒரு மாகாணம்—என்று, தான் அண்மையில் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருந்ததை மீண்டும் உறுதிப்படுத்தியிருப்பதுடன், தனது கூற்று நியாயமானது என்றுவேறு வாதிட முற்பட்டிருக்கிருர்—அமெரிக்க வெளி விவகார இலாகா மந்திரி டல்லஸ்!

பத்திரிகையாளரிடம் பேசிய அவர், 'எனக்குத் தெரிந்தவரையில் உலகம் முழுவதும் கோவாவை போர்ச்சுகலின் ஒரு மாகாணமாகவே மதித்துவருகிறது; கோவா, கடந்த 400 ஆண்டுக் காலமாக போர்ச்சுகல் மாகாணமாகவே இருந்துவருகிறது,' என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

தானும், போர்ச்சுகல் மந்திரி டாக்டர் குன்ஹாவும் அண்மையில் வெளியிட்ட அறிக்கை, கோவா தகராறை ஒட்டி வெறுப்பையும், பகைமையையும் கக்குவதை எதிர்த்தே செய்யப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

தனது அறிக்கையில், தான் கண்டனம் தெரிவித்தது, கோவா பற்றி ரஷ்யத் தலைவர்கள் குறிப்பிட்டதற்கே என்றும் தெளிவாக்கியிருக்கிருர். டல்லஸ்.

இந்தியாவில் அமெரிக்கத் தூதுவர் வருத்தம்?

கோவா சம்பந்தமாக டல்லஸ்—குன்ஹா கூட்டறிக்கை, துரதிருஷ்ட வசமாக இந்தியாவில் சிலரால் 'தவருன அர்த்தம்' செய்து கொள்ளப்பட்டிருப்பது பற்றி வருந்துவதாகவும், இந்த அறிக்கையின் விளைவாக எந்தவிதக் கருத்து ஏற்பட்டிருப்பினும், அது சீக்கிரத்தில் நீக்கப்படுமென்று தான் நம்புவதாகவும் இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதுவரான கூப்பர் குறிப்பிட்டுள்ளார்.

நேருவுடன் சந்திப்பு

அமெரிக்கத் தூதுவர் கேட்டுக் கொண்டதின் மீது, பிரதமர் நேரு அவருடன் அரைமணி நேரம் உரையாடியுள்ளார்; அக் கூட்டு அறிக்கையினுல் விளைந்துள்ள நிலைமைகளைப் பற்றியே அவர்களிடை நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் இருந்திருக்குமென நம்பப்படுகிறது.

'வட அட்லாண்டிக் ஒப்பந்தப் பிரதேசத்திற்குள் கோவா பிரச்சினை வராது' என்று டல்லஸ் தெளிவாக்கிய போதிலும், 'கோவா, போர்ச்சுகீசிய மாகாணங்களில் ஒன்று' என போர்ச்சுகல் கொண்டாடும் பாத்தியதைக்கு அமெரிக்கா ஆதரவளித்தது, காலனி ஆட்சியை ஆதரிப்பதேயாகும்—என்று, இந்தியா சுட்டிக் காட்டுகிறது.

அமெரிக்கா செல்கிருர்!

அமெரிக்க அரசாங்க இலாகாவுடன் வழக்கமான முறையில் கலந்தாலோசிப்பதற்காக ஜனவரி இரண்டாவது வாரத்தில் தாம் வாஷிங்டன் செல்லப் போவதாக அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார். ஆனுல், கூட்டறிக்கைக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாதென்று அவர் குறிப்பிட்டுள்ளார்

கோவாவை விடமாட்டாராம்!

கோவா சம்பந்தமாகப் போர்ச்சுக்கல் சர்க்காரின் நிலை, அசைக்க முடியாத 'அரண்' என்றும், இதில் எவ்வித மாறுதலும் ஏற்படுத்துவதற்கு இடம் கிடையாதென்றும், போர்ச்சுக்கல் அயல்நாட்டு அமைச்சர் டாக்டர் குன்ஹா, லாஸ் ஏஞ்சல்ஸ் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கு சூடு!

'கோவாவில் போர்ச்சுக்கல் எவ்வளவு காலமாகத் தங்கியிருந்தால் தான் என்ன? 'போர்ச்சுக்கலின் மாகாணம்' என்ற தகுதிக்குக் கோவா உரியதா என்பதுதான் விவாதத்திற்குரிய பிரச்சினையாகும்; இந்திய வம்சா வழியில் வந்த 6,40,000 பேர் கோவாவில் உள்ளனர்; அவர்களின் மத்தியில் ஐரோப்பியர், போர்ச்சுக்கீசியர் உட்பட 1,450 இந்தியரல்லாதார் வசிக்கின்றனர்; எனவே, கோவா பிரச்சினையை சரியான கண்ணேட்டத்துடன் அமெரிக்க அரசாங்க இலாகா கவனித்து, தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைத் தெளிவுபடுத்தவேண்டும்,"

என்று, நியூயார்க்கிலுள்ள 'கிறிஸ்டியன் சயன்ஸ் மானிடர்' என்ற இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

தகராறை ஏற்படுத்திய டல்லஸ்!

"அமெரிக்கா ஒரு காலனி வல்லரசு—என்று ரஷ்யர்கள் ஆசியாவில் கூறிவரும் 'கதை'யைப் போக்குவதற்கு இலட்சக்கணக்காகப் பணத்தைச் செலவிட்டு வருகிறேம்; இந்த நிலைமைகளில், கோவாவைப் பற்றிய தகராறில், அமெரிக்காவை டல்லஸ் ஈடுபடுத்தியது, துரதிருஷ்டமானதாகும்,"

என்று, 'பாஸ்டன் குளோப்' என்ற இதழ் எழுதியுள்ளது.

ரஷ்ய - பர்மியத் தலைவர்கள் கூட்டறிக்கை

இரங்கூன், டிச. 6—

"சர்வதேச நெருக்கடியை மேலும் தணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்,"

என்று, சோவியத் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டுச் செயலாளர் குருஷ்சேவ் - பர்மியப் பிரதமர் யூ - நூ ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

"நான்கு வல்லரசுகள் ஜினீவா மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவுகள் மேற்கொள்ளப்படாவிட்டாலும், சமாதானத்தின்மீது நாட்டம் கொண்டு சிக்கல்களுக்கு முடிவு காணத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது மிக அவசியமாகும்," என்றும் அவர்களது அறிக்கை கூறுகிறது

ஆயுதப் போட்டி கண்டு தாங்கள் மிகுந்த கவலை கொள்வதாயும், நீரவளிக் குண்டு போன்ற அணு ஆயுதங்கள் உற்பத்தி, பரிசோதனை உபயோகம் இவற்றை நிபந்தனையின்றித் தடைசெய்ய வேண்டும் என்றும் தங்கள் அறிக்கையில் சோவியத் பர்மியத் தலைவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

உள்நாட்டு விவகாரத்தில்

தலையிடுகிறதாம்!

சோவியத் ரஷ்யாவின் குறிப்புக்கு ஈரான் ஆட்சேபக் குறிப்பு

டெஹ்ரான் டிச. 6—

"பாக்தாத் ஒப்பந்தம் எவ்வகை ஆக்கிரமிப்புக் காரியங்களுக்காகவும் செய்யப்பட்ட ஒன்றல்ல—அது, எந்த நாட்டிற்கும் எதிராகச் செய்யப்பட்டதல்ல; இது பற்றிய தனது கருத்தைத் தெரிவிக்கையில், ரஷ்யா, 'ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட கூட்டு' என்று குறிப்பிட்டிருப்பது உண்மையல்ல; இவ்வாறு விளக்கம் தந்திருப்பது நட்புறவுப்போக்கற்ற ஒரு செயலாகும்,"

என்று, பாக்தாத் ஒப்பந்தத்தில் ஈரான் சேர்ந்துள்ளது குறித்து இரண்டு நாட்களுக்கு முன்னர் சோவியத் ரஷ்யா தெரிவித்திருந்த ஆட்சேபணையை நிராகரித்து, ஈரான் சர்க்கார் பதில் குறிப்பொன்று விடுத்துள்ளது

"மாஸ்கோவின் இந்த ஆட்சேபக் குறிப்பு, ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக அமைந்திருக்கிறது,"

என்றும், அக்குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் பிரிட்டன், பாகிஸ்தான், துருக்கி, இராக், ஈரான் நாடுகளுடன் மற்றும் சிலவும் சேர்ந்துள்ளன.

சென்னைக்கு முதலிடம்

பொடி உபயோகிப்பதில் இந்தியாவிலேயே சென்னைக்கு முதலிடமும், பம்பாய்க்கு இரண்டாவது இடமும் கிடைத்திருக்கிறதாம்!

1954—55-ல் 18 மாநிலங்கள் 96,79,144 இராத்தல் புகையிலையை உபயோகித்திருக்கின்றன.

அதில், சென்னை மாநிலத்தில் 45,43 230 இராத்தலும், பம்பாய் மாநிலத்தில் 39,18,183 இராத்தலும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

பொடி போடுகிறவர்கள் குறைவாயுள்ள மேற்கு வங்காளத்தில் குறிப்பிட்ட காலத்தில் 47 இராத்தல் புகையிலை மட்டுமே உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

இதர 10 மாநிலங்கள் பொடி செய்வதற்காக உபயோகித்த புகையிலை புள்ளி விவரங்கள் வருமாறு:—

	இராத்தல்
உத்தர பிரதேசம்	1,44,088
மத்தியப் பிரதேசம்	17,496
ஆஜ்மீர்	1,91,302
குடகு	1,012
ஐதராபாத்	25,707
மைசூர்	15,128
சௌராட்டிரம்	7,25,905
திரு-கொச்சி	6,982
இராஜஸ்தான்	74,894
மத்திய பாரத்	15,720

பொதுக்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

★

பெரும் புயல் வீசியதன் காரணமாகத் தஞ்சை—திருச்சி—மதுரை—இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் பெருங்கேடுகளுக்கு உள்ளாகியிருப்பதாலும், கிளைக் கழகங்களை நிவாரண வேலைகளில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதாலும், புயலாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செல்ல வேண்டியிருப்பதாலும் 18—12—55 ஞாயிறன்று குடந்தையில் நடக்க இருந்த பொதுக்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து பொதுக்குழுக் கூட்டம் கூட்டும் விபரத்திற்குப் பின்னுல் அறிக்கை வெளியிடப்படும்.

"அறிவகம்,"
சென்னை-13
7-12-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

தலைமைக் கழகம்: அறிக்கை—32/55

தி. மு. கழக உறுப்பினர் சேர்த்தல்

1955 டிசம்பர்—1956 சனவரி ஆகிய இரண்டு திங்களும் உறுப்பினர் சேர்க்கும் காலமாகும்

[சில முக்கியமான திருத்தங்களோடு, 31/55 என்ற அறிக்கை 32/55 அறிக்கையாக வெளியிடப்பெறுகிறது. இதையே இனி நடைமுறைக்கு ஏற்றுக்கொள்க.]

(1) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய உறுப்பினர்களைப் புதுப்பிப்பதற்கும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் உரிய காலமாக, 1955 டிசம்பர்—1956 சனவரி ஆகிய இரண்டு திங்கள்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

(2) இப்பொழுதுள்ள உறுப்பினர்கள் 1956 சனவரித் திங்கள் 31-ம் நாளுக்குள் தம் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்குள் புதுப்பித்துக் கொள்ளாவிட்டால், 1956 பிப்ரவரி 1-ஆம் நாளிலிருந்து தி. மு. கழக உறுப்பினர் தகுதியை அத்தகையோர் இழந்துவிட்டதாகக் கருதப்படுவர். அதற்குப் பிறகு சேர்பவர்களுக்குப் பழைய உறுப்பினர் தகுதி சேர்த்துக் கணக்கிடப்பட மாட்டாது; புதிய உறுப்பினர் என்றமுறையிலேயே நோக்கப்படுவர்.

(3) உறுப்பினரைப் பதிவு செய்யும் விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டக் கழகங்களிலிருந்து அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) கிளைக் கழகம் தோற்றுவிக்கக்கூடிய, ஆனுல் இதுவரையில் தோற்றுவிக்காத இடத்தில் (சிற்றூர் அல்லது பேரூர் அல்லது நகரம்) முக்கியமான ஒருவர் பொறுப்பாளராக இருந்து பக்கத்துக் கிளைக் கழகச் செயலாளர், அல்லது அருகிலுள்ள மாவட்டப் பிரதிநிதி, அல்லது அருகிலுள்ள பொதுக் குழு உறுப்பினர் ஆகிய ஒருவரின் அறிமுகத்தின் பேரில் விண்ணப்பத் தாளை மாவட்டச் செயலாளரிடமிருந்து பெற்று, உறுப்பினர்களைச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ளலாம்.

(5) கிளைக் கழகம் அமைக்கக் குறைந்தது 25 உறுப்பினர்கள் வேண்டும். கிளைக் கழகம் அமைக்க முடியாத இடத்திலுள்ளவர்கள், பக்கத்திலுள்ள ஏதேனும் ஒரு கிளைக் கழகத்தில் உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொள்ளலாம்.

(6) கிளைக் கழகச் செயலாளரும், கிளைக் கழகம் இல்லாத ஆனுல் அமைக்கக்கூடிய இடத்தில் முக்கிய பொறுப்பாளருந்தான் உறுப்பினர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

(7) ஒவ்வொரு விண்ணப்பத் தாளிலும் இருபத்தைந்து உறுப்பினர்களைப் பதிவு செய்யலாம். ஒவ்வொரு கிளைக் கழகமும் எவ்வளவு உறுப்பினரைத் தம் ஊரில் சேர்க்கமுடியும் என்று எண்ணுகிறதோ அவ்வளவு உறுப்பினருக்குத் தேவையான பதிவுத் தாள்களை மாவட்டக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(8) ஒவ்வொரு உறுப்பினரும், உறுப்பினர் கட்டணமாக அணு 8 செலுத்த வேண்டும்: ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்தும் எட்டு அணுவில் நான்கு அணுவைக் கிளைக் கழகம் வைத்துக்கொண்டு மீதி நான்கு அணுவை நேரே தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். மாவட்டக் கிளைக்குச் சேரவேண்டிய தொகையைத் தலைமைக் கழகம் பிறகு கணக்குப் பார்த்து அந்தந்த மாவட்டக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கும்.

(9) உறுப்பினர் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத் தாளையும், தலைமைக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகையையும் (பாதிக் கட்டணத் தொகை) பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13 என்ற முகவரிக்கு கிளைக் கழகச் செலவில் அப்படியே அனுப்பி வைக்க வேண்டும்.

(10) விண்ணப்பத் தாளும், கட்டணத் தொகையும் வந்து சேர்ந்தவுடன் உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் தலைமைக் கழகத்தால், கிளைக் கழகத்தின் மூலம் உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்பெறும். உறுப்பினர் உரிமைச் சீட்டை, உறுப்பினர், சான்றுக்காக என்றென்றும் வைத்துக் காப்பாற்றி வைக்க வேண்டும்.

(11) கிளைக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும், மாவட்டக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும் அவ்வப்போது அனுப்பி வைக்கப்பெறும்.

(12) பின்னுல் எப்பொழுதாவது ஒரு கிளைக் கழகத்திலிருந்து மற்றொரு கிளைக் கழகத்திற்குத் தக்க காரணங்களோடு தம்மை மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள், உறுப்பினராய் இருக்கும் கிளைக் கழகச் செயற்குழுவின் அனுமதிச் சீட்டோடு, தனியே நான்கு அணுவை தலைமைக் கழகத்திற்குச் செலுத்தி மாற்றிக்கொள்ளவேண்டும்.

(13) எந்தக் கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தக் கூடாது. உறுப்பினர் சேர்க்கும் பணி மட்டுந்தான் இப்பொழுது நடைபெற வேண்டும்.

(14) பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்—பெண்கள் மட்டுமே தி. மு. கழகத்தில் உறுப்பினராகும் தகுதியுடையவராவர். மாணவர்கள் தி. மு. கழகத்தில் உறுப்பினராக வேண்டாம். அவர்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

"அறிவகம்"
சென்னை-13
6—12—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

அறுவடைப் பயிர்கள் அழிந்தன

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தொகை பற்றியும் நிர்ணயித்துக் கூற இயலாதவகையில் செய்திகள் கிடைக்கின்றன.

மக்கள் படும் துயரத்தைச் சுட்டிக்காட்ட முடியவில்லை; என்றாலும் ஆங்காங்கு அவர்களின் வேதனையைக் குறைப்பதற்கு நிவாரண முயற்சிகள் பல பொதுப் படையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. $1\frac{1}{2}$ இலட்சம் சென்னை சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது 'அவசியமானால் மேலும் உதவுவோம்' என்று பிரதமர் கூறியுள்ளாராம்.

அ. இ. கா. கமிட்டி ரூ. 10,000 வழங்கியுள்ளது.

ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி ரூ 2,000 தந்திருக்கிறது.

ஆங்காங்கே நிதி திரட்டும் பணியில், மன்றங்கள், சமூக நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

பல பகுதிகளில், நிதி சேகரிப்பதற்கென பிரமுகர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன.

பி. அண்டு சி. மில் தொழிலாளர் முடிவு

14,000 தொழிலாளர் கொண்ட பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள், தலா ரூ 1 வீதம் அளிக்க முன்வந்துள்ளனர். அதிகமாக 1 மணி நேரம் பணியாற்றி 25,000 கெஜம் துணி உற்பத்தி செய்து தருவதாகவும், இவற்றை வேதனையுறும் மக்களுக்கு அனுப்பிவைக்குமாறும் ஆலை நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

★

திருச்சி மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

"பொதுச்செயலாளர்அறிக்கைக்கிணங்க, நமது மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிளைகளும், தங்கள் தங்கள் பகுதியில், முடிந்த அளவு உடனடியாக உணவு-உடை-உறையுளுக்கு வேண்டிய பொருள்கள்-பணம் ஆகியவற்றைத் திரட்டி வைத்துக்கொண்டு மாவட்டக் கழகத்துக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து திருச்சி மாவட்டத் தண்டல் ஆணையாளர் அவர்களிடம் கொடுத்து பாதிக்கப்பட்ட மாவட்டத்திலுள்ள தண்டல் ஆணையாளர்களிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படும். இன்றே செய்க,"

என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அ. பொ. தர்மலிங்கம் அவர்கள் அறிவிக்கிறார்.

'நம் நாடு' இதழ் மூலமாக வெளியிட முடிவு செய்துள்ளனர் என்றும் தெரியப்படுத்திக் கொள்கின்றனர்.

இதுவரையிலும் நிதி கொடுத்தோர் விவரம்

எஸ். வி. அன்பில் அபுபக்கர் ரூ. 5; பி. எம். சங்கரன் ரூ. 5; செ. கா. செகுமஸ்தான் ரூ 2; நாகூர் மீரா ரூ 1; கூ. மு. சையது இப்ராஹீம் ரூ. 1; கா. பீர்முகமது ரூ 1; மே. அ. மு. நைனுமுகமது ரூ. 1; எம். அப்துல்கபூர் ரூ. 1; எ. எம். முகமது யாகுப் ரூ. 1; சி. தண்டபாணி ரூ. 1; ஜி. நாகமாணிக்கம் ரூ. 1.

வட சென்னையில் புயல் நிவாரண நிதிக் குழு அமைப்பு

சென்னை, டிச. 9—

8—12—55 இரவு 9 மணிக்கு சென்னை, வண்ணை கல்மண்டபம் வீதி, 24 எண்ணுள்ள இல்லத்தில், தமிழ் நாட்டில் புயலின் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டி உதவுவதற்கு திரு. மாயாண்டி (நாடார்) அவர்கள் தலைமையில் பிரமுகர்கள் பலர் கூடிக் கலந்தாலோசித்து கீழ்க்காணும் முடிவுகளைச் செய்தனர் :—

11—12—55 அன்று வட சென்னை முக்கிய வீதிகளின் வழியாக நிவாரண நிதி வசூலிக்க முக்கியப் பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து செல்வதெனவும், நிதி திரட்டி உதவ, ஆகவேண்டிய பொறுப்புகள் அனைத்திற்கும் முக்கியப் பொறுப்பாளர்களே உடனடியாகக் காரியங்களைக் கவனிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

நிதி வசூல் குழுத் தலைவராக திரு. மாயாண்டி (நாடார்) அவர்களையும், செயலாளராகத் தோழர் கே எம். கண்ணபிரான் அவர்களையும், செயற்குழுவினராகத் தோழர்கள் கே. கணேசன், வி. சுந்தரமூர்த்தி செட்டியார், எஸ் ஆர் சுப்பையா, ஏ எம். முத்தையா, பி. எம் லிங்கேசன், என். திருவேங்கட நாயகர், எஸ். தயாகராசன், சி. அருள்மரிநாதன், எம். பி எஸ் ரத்தினசாமி செட்டியார், கே. எஸ். ஆர். செல்லத்துரை, வி. சங்கரன் செட்டியார் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

[குறிப்பு:— புயல் நிவாரண நிதிக்கு உடனடியாக நிதி அனுப்புவோர், திரு மாயாண்டி (நாடார்) அவர்கள், எண். 24, கல்மண்டபம் ரோட், வண்ணை, சென்னை–21. என்றமுகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.]

★

சென்னை நடைபாதை வியாபாரிகள் உதவி

சென்னை, டிச 9—

சென்னை சைனு பசார் நடைபாதை வியாபாரிகள், தமிழ் நாடு புயல் நிவாரண நிதிக்கென ரூ. 20 - ஐ, முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கு தபால் மூலம் அனுப்பியுள்ளனர்.

மேலும், அவர்கள், இந்த நிவாரண நிதிக்குப் பொதுமக்கள் அனைவரும் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு பொருள் உதவி தருவோரது பெயர்களை தினந்தோறும், அன்றாடு நன்கொடைத் தொகையுடன்

சென்னை தொழிற்சாலையில் வேலை நிறுத்த அறிவிப்பு

சென்னையை அடுத்துள்ள அம்பத்தூரிலுள்ள டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள், தாங்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகத் தொழிற்சாலை முதலாளிகளுக்கு, சென்ற 3-ந் தேதியிலிருந்து 14 நாள் நோட்டீஸ் கொடுத்திருக்கின்றனர்.

இரவு கால அலவன்ஸ், போனஸ், பஞ்சப்படி, கூலிஉயர்வு ஆகிய தங்கள் கோரிக்கைகளுக்காகவே அத்தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்த நோட்டீஸ் விடுத்துள்ளனர் என்றும், ஏற்கனவே, இக்கோரிக்கை குறித்து நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகள் முறிந்துபோனதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நடப்பு ஆண்டில், 'செகண்டரி, கல்விச் சீரமைப்பு வேலைகளுக்காக மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு மானியங்களாக மொத்தம் ரூ 1,65,32,681 அனுமதித்திருப்பதாக மக்கள் சபையில் கல்வி மந்திரி தெரிவித்தார்.

தி.மு.கழக மாநில மாநாட்டு நிதிக்காக

10-12-55 மாலை 6 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில், தோழர் கே. ஆர். இராமசாமி இன்னிசை விருந்தளிப்பார்.

நன்கொடை: ரூ. 2, 1.

சென்னை மாவட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு

'11—12—55 பிற்பகல் 3 - மணிக்கு, 'அறிவகத்'தில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். பொருள்: திராவிடர் திருநாள் விழா கொண்டாடுவது பற்றி ஆலோசித்தல். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன். கிளைக் கழகச் செயலாளர்களும் தனி அழைப்பின் பேரில் கலந்து கொள்ளலாம்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவித்துக் கொள்கிறார்.

கோவை மாவட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

"11—12—55 மாலை 4 மணியளவில் ஈரோடு, மாவட்டக் கழகக் கட்டிடத்தில் (எண் 342, நேத்தாஜி வீதி) மாவட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். பொதுக் குழுவுக்கு உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுத்தல், மாநில மாநாட்டு நிதி, உறுப்பினர் சேர்த்தல், பொங்கல் வாரத்தில் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்ஆகிய பொருட்கள்குறித்து ஆலோசிக்கப்படும். மாவட்டக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தரவேண்டுகின்றேன்,"

என்று, கோவை மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கேட்டுக்கொள்கிறார்.

புதுவை தி. மு. கழக வட்டக்குழு உறுப்பினர்கட்கு

"11—12—55 காலை 9 மணியளவில் புதுவை தி. மு. கழக இல்லத்தில், வட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். பொருள் : வரவேற்புக் கூட்ட வரவு-செலவு கணக்குப் பார்த்தல். ஒவ்வொரு கிளைச் செயலாளர்களும், நன்கொடை வசூல் புத்தகமும், சேரவேண்டிய பாக்கியையும் அவசியம் கொண்டுவர வேண்டுகிறேன்,"

என்று, புதுவை தி. மு. கழகச் செயலாளர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

பரமக்குடி தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு

சென்ற 3—12—55-ல் நடக்கவிருந்த செயற்குழுக் கூட்டம் இங்கு வீசிய புயலினாலும், வெள்ளத்தாலும் நடைபெற இயலவில்லை. ஆகையால் 11—12—55 இரவு 10 மணிக்கு செயற்குழுக்கூட்டம் நடைபெறும். அதுபோது, தஞ்சை, முகவை மாவட்டங்களில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரமக்குடி தி. மு. கழகம் நிதி சேகரித்து தரும் விடயமாகவும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்படும்.

தி. மு. க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் செங்கற்பட்டு வருகை

★

11—12—55 மாலை 6 மணிக்கு செங்கற்பட்டு தர்க்கா திடலில், தி. மு. கழக மாநில மாநாட்டு நிதியளிப்புக் கூட்டம், தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கடலூர் நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

"12—12—55 இரவு 9 - மணிக்கு கடலூர் நகர-தி.மு. கழக அலுவலகத்தில், நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நகர தி. மு. க. செயலாளர் கே. இளங்கோ முன்னிலையில் நடைபெறும். சில முக்கியப் பிரச்சினைகள் பற்றி ஆராய வேண்டியுள்ளதால் அவசியம் அனைவரும் தவறாது வருகை தர விழைகிறேன்."

என்று. செயலாளர் கே இளங்கோ அறிவிக்கிறார்.

கோவை அழகிரி நினைவுப் படிப்பக 4-வது ஆண்டு விழா

11—12—55 மாலை 6 மணிக்கு. கோவையில், மேற்படி படிப்பகத்தின் 4-வது ஆண்டு விழா நடைபெறும். தோழர் டி. கே சீனிவாசன், மற்றும் பலர் பேசுவர்.

முயற்சி மன்ற ஆண்டு விழா

11—12—55 மாலை 5 மணிக்கு, பெங்களூர்-அலசூர் குண்டப்பா மைதானத்தில், (ஜெயப்பிரகாஷ் மைதானம்) தோழர் அ. மு. கண்ணன் தலைமையில் நடைபெறும் தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

குறள் வகுப்பு

10—12—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்து கிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும் 'தெரிந்து வினையாடல்' என்பது குறித்து திரு. மயிலை சிவமுத்து சொற்பொழிவாற்றுவார்.

ஃ ஃ ஃ

11—12—55 மாலை 4 மணிக்கு, ஆம்பூர் இ. உ. பள்ளியில், திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக நடைபெறும். 'நீத்தார் பெருமை' எனும் அதிகாரத்தைக் குறித்து தோழர் ஆ மா. சிவஞானம் பேசுவார்.

வள்ளுவர் மன்ற சிறப்புக்கூட்டம்

11—12—55 மாலை 6 மணிக்கு, நெல்லிக்குப்பம் திரௌபதியம்மன் கோயில் திடலில் நடைபெறும் திருவாளர்கள் குன்றக்குடி அடிகளார், கருணாநந்தம், வி. மு. கலியப்பெருமான் மயிலாசனம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அனுதாபக் கூட்டம்

10—12—55 மாலை 6-30 மணிக்கு, குனியமுத்தூர் தி. மு கழகப் பணிமனையில், மஜீத்—கருப்பண்ணன் மகனும், தாயாரும், தோழர் இலட்சுமணன் தங்கை இராமாத்தாள் ஆகியோர் இயற்கையெய்தியமைக்கு அனுதாபக் கூட்டம் நடைபெறும்.

பொதுக்கூட்டம்

12-12-55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு வேலூர் (சேலம்) வ. உ. சி. திடலில், அண்ணா மன்றச் சார்பில், தோழர் மா. இராசலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வி. காளியப்பன், நாவரசன், வி. எ. இராமனுதன், வி. எ. இலக்குமணன் ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

கோபிச்செட்டிப்பாளையம்

பெரியார் மைதானத்தில் 11—12—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

என். வி. நடராசன்

எஸ். அப்பாவு

★

கத்திவாக்கம்

11—12—55 மாலை 6 மணிக்கு இரயில்வே நிலையத்திற்கு அருகில், தோழர் எம் அப்துல்லா தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆ. கிருட்டிணன், இராதாமணாளன், நாதம் டி ராமசாமி ஆகியோர் பேசுவர்.

சட்டக் கல்லூரி தமிழ் மன்ற நிதிக்காக

10-12-55 காலை 10 மணிக்கு, சென்னை-பாரகன் தியேட்டரில், தோழர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில், 'நிரபராதி'—படக்காட்சி நடைபெறும்.

நடிகைகள் அஞ்சலிதேவி, ஜி வரலட்சுமி, ராஜசுலோசனா ஆகியோர் மேடையில் தோன்றுவர்.

மறைமலை அடிகள் நாள்

10—12—55 மாலை 6–30 மணிக்கு சென்னை-சூளை, மாணிக்கச் செட்டித் தெரு, நகர இளைஞர் கழக மனையில், தோழர் எஸ். எஸ். இராசன் தலைமையில் நடைபெறும். தோழர் எம்.என்.முத்து கிருஷ்ணன பேசுவார்.

முத்தமிழ் மன்றப் பொதுக் குழு உறுப்பினர்கட்கு

11—12—55 காலை 10 மணிக்கு சென்னை—முத்தியாலுப்பேட்டை, முத்தமிழ் மன்றப் பொதுக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, மன்ற வரவு-செலவு கணக்குகளை சரிபார்த்தல், துணைத் தலைவர், செயற் குழு உறுப்பினர் இருவர் தேர்தல் ஆகியவை ஆய்வுக்கு வரும்.

திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக வளர்ச்சி நிதிக்காக

11—12—55 காலை 10 மணிக்கு சென்னை பிரபாத் டாக்கீசில், தோழர் கண்ணதாசன் தலைமையில், எனெஸ்கே பிலிம்சாரின் 'மணமகள்'—படக்காட்சி நடைபெறும். கட்டணம் வழக்கம்போல்.

சென்னையில் பிரிவினை குழு நியமனம்

சென்னை, டிச. 8—

மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்மீது இந்திய சர்க்கார் செய்துள்ள முடிவுகளை அமுல் நடத்தும் பொருட்டு, சென்னை சர்க்கார், பிரிவினைக் குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

சென்னை மாநிலம் சம்பந்தமாக முடிவு செய்யப்பட வேண்டிய எல்லா முக்கியமான பிரச்சினைகளையும் இப்பிரிவினைக் குழு விரிவாகப் பரிசீலனை செய்யுமாம்.

கட்டாயத் துவக்கக் கல்வி

புதுடில்லி, டிச. 8—

துவக்கக் கல்வியைக் கட்டாயக் கல்வியாக ஆக்கும் பொருட்டு, 18-மாநில சர்க்கார்கள் அதுபற்றி சட்டம் இயற்றியிருப்பதாகவும், இதுபற்றி மாநில சர்க்கார்களுக்கு உத்தரவு எதுவும் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று மத்திய சர்க்கார் கருதுகிறார்கள் என்றும், மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.